பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 16 வியாழக்கிழமை 02.12.2021 கதிர் 255

## ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது சாவகச்சேரி நகர சபையின் பாதீடு

(இ.கலையமுதன்)

சாவகச்சேரி நகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜட் கூட்டம் நகர சபைத் தலைவர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இன்று காலை கூடியது. ☞2

## கடற்படைக்கு காணி வழங்குவதாக நான் ஒருபோதும் கூறவே இல்லை

### இப்படிச் சொல்கின்றார் வடக்கு ஆளுநர்

(இ.கலையமுதன்)

யாழ்., மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக நான் ஒருபோதும் கருத்துத் தெரிவிக்கவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் கடற்படைக்கு மாதகல் காணிகளை வழங்குகின்றார் ☞2



## யாழ். கடலில் 6 நாள்களில் இன்று ஐந்தாவது சடலம்!

### மக்களிடத்தில் பெரும் அச்சம்



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி, சுப்பர்மடம் கடற்கரையில் இனந்தெரியாத ஆணின் சடலம் உருக்குலைந்த நிலையில் இன்று கரையொதுங்கியது.

கடந்த ஆறு நாட்களுக்குள் யாழ். குடாநாட்டு கடற்பரப்பில் இனந்தெரியாத ஐந்து ஆண்களின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை பொதுமக்களிடத் ☞2

# பொதுமக்களையும் அரச அதிகாரிகளையும் பகைக்காமல் காணி விடயத்தைத் தீருங்கள்!

## பாதுகாப்பு அமைச்சுக்கு பிரதமர் அலுவலகம் வழிகாட்டல்

கொழும்பு, டிசெம்பர்,02

வடக்கு, கிழக்கில் படையினருக்குத் தேவையான தனியாரின் காணிகளைச் சுவீகரிக்கும் விடயத்தை பொது மக்களையும் அரச அதிகாரிகளையும் தேவையற்றுப் பகைத்து, அவர்களை அதிருப்திக்குள்ளாக்காமல் சுமுகமாகத் தீர்ப்பதில் அவதானம் செலுத்துங்கள்! – இவ்வாறு பாதுகாப்பு அமைச்சுக்கு பிரதமர் அலுவலகம் வழிகாட்டல் வழங்கியிருக்கிறார் என அறியவருகின்றது.

படை முகாம்களுக்கு காணி சுவீகரிப்பு விடயத்தில் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் உட்பட்ட பொதுமக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் – ☞2

## ஆளுநரின் எச்சரிக்கை சிறுபிள்ளைத்தனமானது; போராட்டத்தை அடக்க அவருக்கு அதிகாரமில்லை

### ஸ்ரீகாந்தா கடும் கண்டனம்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான காணி அளவீடுகளுக்குத் தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்திருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆளுநரின் இந்த எச்சரிகை சிறுபிள்ளைத்தனமானது. ☞2



## காணி உரிமையாளர்களை சந்தித்தார் வடக்கு ஆளுநர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் – மாதகல் பகுதியில் கடற்படையிரின் பயன்பாட்டுக்கென அளவீடு செய்யமுற்பட்ட காணிகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை வடக்கு மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா இன்று யாழ்ப் ☞2

## நல்லூரிலும் வெடித்து சிதறிய காஸ் அடுப்பு




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் இன்று இடம்பெற்றது. ☞8

## சம்மாந்துறையிலும் இன்று வெடித்தது எரிவாயு அடுப்பு

(பாறுக் ஷிஹான்)

தேநீர் தயாரிக்கப் பயன்படுத்திய எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் பதிவாகியுள்ளது. ☞8





## கல்விசாரா ஊழியர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்குங்கள்!

### யாழ். பல்கலையில் அடையாள மௌனப் போராட்டம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இன்று இடம்பெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்ட காலமாக நிலவிவரும் பல்கலைக் கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகப் பல்கலைக்கழக ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஆளுநரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீடுகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட மக்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இணைந்து எழுப்பியிருந்த எதிர்ப்புக் குரல்களின் ஓர் அங்கமாகவே மாதகலில் காட்டப்பட்ட எதிர்ப்பும் அமைந்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது என்று இலங்கை அரசு பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பின்னரும், போர் நிகழ்ந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைத் தரப்பின் பிரசன்னம் என்பது போர்க்காலத்தைப் போலவே தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. பல்வேறு படைத்தளங்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் கள்ளக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பது என்ற பெயரில் 1957இல் காரைநகரில் நிறுவப்பட்ட கடற்படைத்தளம் தொடர்ந்து விஸ்தரிக்கப்பட்டு ஒரு பாரிய தளமாக நிலைத்து நிற்கையிலும் கூட இந்த விஸ்தரிப்புக்கள் தொடர்கின்றன.

இன்னுமோர் பாரிய கடற்படைத் தளம் காங்கேசன்துறையிலும் இருக்கின்றது. ஆயினும், மாதகலில் உள்ள கடற்படை முகாமின் தேவைக்காகத் தனியார் காணி ஒன்றை சுவீகரிக்கும் திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது வடக்கு மாகாண ஆளுநரால் விடுக்கப்பட்டிருக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கை, நீடித்துக் கொண்டிருக்கும் காணி அபகரிப்புப் பிரச்சினையை மேலும் சிக்கல் அடைய வைத்துப் பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம்.

தம்மைப் பாதிக்கும் எந்தவொரு அரச நடவடிக்கைக்கும் எதிராக சமூகமட்டத்தில் எவரும் சட்டத்துக்கு அமைவாக எதிர்ப்புத் தெரிவிக்க முடியும். அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த உரிமை நீதிமன்றங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றது.

மாதகல் உட்பட வடக்கில் தொடரும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த உரிமையின் அடிப்படையிலேயே எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

வடக்கைப் பொறுத்த மட்டில் இது ஒன்றும் புதிய விடயமல்ல, புதிய ஆளுநர் வடக்குக்கு வருவதற்கு முன்பிருந்தே நிலை கொண்டு, நீடித்து நிற்கும் விவகாரம்.

இந்தப் பிரச்சினையில் அதிகாரபூர்வமாகத் தலையிடுவதற்கு சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு இடமில்லை. தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களோடு வடக்கு மாகாண சபை இயங்க முடியாமல் ஸ்தம்பிக்க வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் சகல அதிகாரங்களையும் கையாளும் ஆளுநருக்கு காணி மற்றும் பொலிஸ் துறை தொடர்பான எந்த அதிகாரமும் கிடையாது.

அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் துறை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இன்னமும் பகிரப்படாத நிலையில், அந்த அதிகாரங்கள் எவையும் ஆளுநருக்குக் கிடையாது. மாறாக, இந்த அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன. இதுதான் யதார்த்தம்.

நிலைமை இப்படி இருக்கையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஆளுநர் எச்சரிப்பது சிறுபிள்ளைத்தனமானது.

பதவி ஏற்ற கையோடு வடக்கில் வாள் வெட்டுக் குழுக்களை அடக்கப்போவதாக ஆளுநர் அறிவித்தபோது, அது நல்ல நிலைப்பாடாக இருந்தாலும், அது தொடர்பில் அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை அப்போது நாம் சுட்டிக்காட்ட விரும்பியிருக்கவில்லை. ஏனெனில் பதவி ஏற்றுக்கொண்ட நிலையில் எதிர் மறையான கருத்தோடு அவரை வரவேற்பது அரசியல் நாகரிகம் அல்ல என்றே நாம் கருதினோம்.

பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆள்வது போன்ற கனவுகள் கலைவது பொதுவாக சகலருக்கும் நன்மையானது.

காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டம் பாய வேண்டுமானால் கொழும்பிலிருந்து தான் அது ஏவப்பட வேண்டும். நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் அரசு, எவர் தூண்டினாலும் இன்றைய சூழ்நிலையில் அதனைத் தவிர்க்கவே விரும்பும் என்பது எமது கணிப்பு. மாறாக சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்படுமானால், சிறு எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலாக பாரிய போராட்டங்களுக்கே அவை அடி கோலும்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கரிசனை காட்டும் அதேவேளையில் பொது மக்களுக்கு எதிராக பொல்லுகளோடும் மிரட்டல்களோடும் அன்றைய தினம் மாதகலில் அரங்கேற்றப்பட்ட சட்டவிரோத சம்பவங்கள் பற்றியும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பிறப்பால் தமிழர். தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர். உணர்வுபூர்வமான விவகாரங்களில் வடக்கு மக்களின் மனங்களைக் காயப்படுத்தாமலும் கோபப்படுத்தாமலும் வெல்வதற்கு அவர் முன்வர வேண்டும் என்பதே எமது ஒரேயொரு வேண்டுகோள் - என்றுள்ளது.

## ஏகமனதாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் தவிர்ந்த அனைவரும் சபைக்குப் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது தலைவரால் வரவு - செலவுத்திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சபையில் பிரசன்னமாகி இருந்த அனைத்து உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவோடு அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

## கடற்படைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்து செய்திகள் வெளிவந்த நிலையில் இது தொடர்பில், இன்று தனியார் நிறுவனத்தின் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று நான் காணி உரிமையாளர்களுடன் பேசுவதாக வெளியான செய்தி பிழையானது.

இன்றைய தினமே முதன்முதலாக காணி உரிமையாளர்களுடன் நான் நேரடியாகக் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளேன்.

காணி உரிமையாளர்களுடன் பேசி காணியின் உறுதிகளைச் சரி பார்த்து. காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க முடியும் - என்றார்.

## யாழ். கடலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் பெரும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு - மணற்காட்டுப் பகுதியிலும் அன்றைய தினம் வடமராட்சி - வல்வெட்டித்துறைப் பகுதியிலும் இரண்டு சடலங்கள் கரையொதுங்கின. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுப் பகுதியில் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

அதனைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு - வெற்றிலைக்கேணி பகுதியில் செவ்வாய்க்கிழமை சடலம் ஒன்று கரையொதுங்கியது. இதனைத் தொடர்ந்து இன்று வியாழக்கிழமை பிற்பகல் வடமராட்சி - சுப்பர்மடம் கடற்கரையில் இனம்தெரியாத சடலமொன்று கரையொதுங்கியது.

## பொதுமக்களையும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்து விடயங்களைக் கையாலும் அரச அதிகாரிகள், மேலிடத் தரப்புக்களால் கடும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றும் - கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பான களநிலை அறிக்கையை சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் இருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையிலேயே, பொதுமக்களையும், அரச அதிகாரிகளையும் வீணாக அச்சுறுத்திப் பகைக்கும் மார்க்கத்தை நாடாமல், சுமுகமாகத் தீர்க்கும் வழிமுறைகளை மேற்கொள்ளும்படி பிரதமர் அலுவலகத்தினால் பாதுகாப்பு அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதாக அறியவந்தது.

பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டலை சாதகமாகப் பரிசீலிக்கும் பதில், பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

தமிழ் மக்களின் காணிகளைப் பலவந்தமாகப் பிடுங்கும் படைத்தரப்பின் நடவடிக்கை வரும் மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கூட்டத்திலும் எதிரொலிக்கும் என்பதால் இந்தவிடயத்தைச் சர்ச்சையின்றிக் கையாள வேண்டும் என்பதில் அரசுத் தலைமை கரிசனையாக இருப்பதாகவும் -

ஆனால், இது விளங்காத இடைத்தரப்புக்கள் சில, தாங்கள் மேலிடத்தில் நல்ல பெயர் எடுப்பதற்காக 'குத்தி முறிகின்றன' எனவும் கூறப்பட்டது. (உ)

## காணி உரிமையாளர்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

காணி உரிமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடிய வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமம் தொடர்பில் கேட்டறிந்தார்.

சிலருடைய காணிகளுக்கான சட்ட நீதியான உரிமங்கள் இல்லாமை ஆளுநரால் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சங்கானை மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர்களை நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

## கல்விசாரா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனொரு கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலிலும் இன்று நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்கு, சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.


**சிறுநீரகம் தேவை**

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (A+ குருதி இனம்) அவசரமாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விரும்புபவர்கள் புகைபிடித்தல், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். HLA Report வைத்திருப்பவர்கள் அவசரமாகத் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு - 0773126807**



**மருந்தியலாளர் ( PHARMACIST) வேலைவாய்ப்பிற்கான கற்கைநெறி ஆரம்பம்**

தற்போது "மருந்தாளர்" வேலை என்பது மிகவும் அனைவருக்கும் வேண்டப்பட்ட தொழிலாக அமைந்துள்ளது. எங்கிருந்தாலும் இவ் கற்கைநெறியை கற்கலாம் என்பதற்கு அமைய EXTERNAL PHARMACIST பரீட்சைக்கு தயார்படுத்தும் ONLINE வகுப்புகள் மூலம் இணைந்து கொள்ளலாம்.
இப் பரீட்சை கொழும்பு மருத்துவ பீடத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்றது. இவ்வாண்டுக்குரிய EXTERNAL PHARMACIST EXAM 11. 12. 2021 திகதி நடைபெறவுள்ளது.

- ✔ GCE OL ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி
- ✔ GCE AL இரசாயன பாடம் உட்பட விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சாதாரண சித்திகளுடன்

- வயது கட்டுபாடு இன்றி விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பித்து இரண்டு வருட காலப்பகுதியின் பின்னர் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து மருந்தாளராக பதிவு செய்த பிற்பாடு மாத வருமானம் ரூபா 50,000 இற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ள முடியும்.
- வெளிமாவட்ட பரீட்சாத்திகளின் நன்மை கருதி சனி , ஞாயிற்று கிழமைகளில் மாலை 6.30 - இரவு 9.30 மணி வரை Online வகுப்புக்கள் மார்கழி மாதம் 04.12.2021 ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.
- இவ் கற்கைநெறியானது இல 464, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரியில் சனி , ஞாயிற்று கிழமைகளில் ( வெளிவாரிபட்டப்படிப்பு ) சனி , ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நேரடி வகுப்புக்கள் மூலம் ( Personal class ) 02.01.2022 திகதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளது .
- "CERTIFICATE IN PHARMACY" என்னும் ஆறு மாத கற்கைநெறி Online வகுப்புக்கள் மூலம் திங்கட்கிழமைகளில் இரவு நேரத்திலும், நேரடி வகுப்புக்கள் ( Personal classes ) யாழ்ப்பாண கல்லூரியில் பி.ப 1 மணி - 3 மணி வரை நடாத்தவுள்ளோம். இதற்கான குறைந்தபட்ச தகைமையாக GCE O/L ஆங்கில பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சிகிச்சை நிலையங்களில் மருந்தகங்களில் பணிபுரிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

உங்களது விபரங்களை
**0776256292**
எனும் இலக்கத்திற்கு Whatsapp ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது மேலதிக தகவல்களுக்கு
**0773164251**
எனும் இலக்கத்திற்கு அழைத்து நேரு Sir உடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பணவீக்கம் எக்கச்சக்கம்

நாட்டின் பணவீக்கம் மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவரக்கூற்று இந்த விடயத்தைத் தெரிவிக்கின்றது.

இலங்கையின் சரித்திரம் 13 வருடங்களின் பின்னர் – 154 மாதங்களின் பின்னர் – கடந்த மாதத்தில் தான் 9.9 சதவீதமான பணவீக்கம் எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தப்பின்னடைவிலிருந்துநாடும்மீளும்ஏதுநிலைகள் தென்படவில்லை. நிலைமை இன்னும் மோசமடையக் கூடும். நாட்டின் பொருளாதாரம் அதலபாளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு.

இந்த மாத்தில் பணவீக்கம் முதல் தடவையாக இரட்டை இலக்கத்தை எட்டி நாட்டின் மோசமான கட்டத்தைப் பறைசாற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உணவு வகைகளுக்கான பணவீக்கம் பெறுமதி கடந்த 157 மாதங்களில் மிக உச்சமாகக் கடந்த மாதத்தில் 17.5 என்ற எல்லையைத் தொட்டிருக்கின்றது.

இலங்கை ரூபாவின் பெறுமதி மோசமாக சரிந்து வரும் நிலையில் நாட்டின் அந்நியச் செலவாணி அடியோடு கரைந்து விட்டது. அடுத்த மாதத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள், மருந்துகளும், எரிபொருள் வகைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்குக் கூட அந்நிய செலாவணி சேமிப்பு இல்லை.

நாட்டைப் புரட்டிப்போட்ட இனவாத யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் நாட்டின் பொருளாதாரத்தை மாறி மாறி வந்த அரசுகளினால் தூக்கி நிறுத்தவே இயலவில்லை.

நாட்டின் பொருளாதார நிலைக் கூற்றைப் பார்க்கும் போது யுத்தம் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் நிலைமை முந்திய வருடத்தைப் பார்க்கிலும் மோசமாக இருக்கின்றதே தவிர, மேம்படவேயில்லை. இதுதான் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரப் போக்கு.

வெளிநாட்டில் உழைப்போர், உற்பத்தியைப் பெருக்குவோர் சட்ட ரீதியாக வெளிநாட்டுப் பணத்தை இலங்கைக்கு – உள்நாட்டுக்கு – பணத்தை அனுப்புவார்களாயின் அதன் மூலம் அந்நியச் செலாவணிக் கையிருப்பு உயரும் வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் ரூபாவுக்கு எதிராக டொலரின் பெறுமதியை செயற்கையாக அரசு டொலருக்கு 202 ரூபா என்ற அளவில் வலிந்து பேணுகின்றது. ஆனால் வெளியில் நாணயமாற்றுச்சந்தைப்பரிவர்த்தனையில்டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 235ரூபாவை எட்டியுள்ளது.

அதனால் வெளிநாடுகளில் இருந்து இங்கு பணம் அனுப்புவோர் அல்லது இலங்கையில் உள்ள தமது வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பீடு செய்பவர்கள், வெளிநாட்டு உழைப்பை இலங்கையின் அரச சட்ட திட்டங்களுக்கு ஊடாக அனுப்பி டொலருக்குச் சுமார் 35 ரூபா வீணாவதை விரும்ப மாட்டார். அதனால் தனியார் பரிவர்த்தனை நிலையங்கள், உண்டியல் போன்ற முறைமைகள் ஊடாக பணத்தை இலங்கைக்கு அனுப்பி வருகின்றனர். இதனால் அந்தப் பணத்தை அரசு அந்நிய செலாவணியில் சேமிக்க முடியாதுள்ளது.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டில் உழைத்தோ, பிற வழிகளில் சம்பாதித்தோ இங்கு பணத்தை அனுப்புவோர்கள் அதனை அரச வங்கிக் கட்டமைப்பு ஊடாக அனுப்பினால் டொலருக்குப் பத்து ரூபா மேலதிகமாகத் தரப்படும் என அரசு – மத்திய வங்கி – ஆசை காட்டுகின்றது. ஆனால் அப்படி டொலருக்குப் பத்து ரூபா கூட்டித் தந்தாலும் வெளிச்சந்தையில் விற்பனையாகும் 235 என்ற தொகையை அது எட்டாது. ஆகவே அரசின் இந்த பத்து ரூபா மேலதிக வெகுமதித் திட்டமும் நாட்டின் பொருளாதார நிலைமை போல் அடியோடு படுத்துவிடும் என்பது உறுதி.



## நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான இணைந்த செயற்பாடு வரவேற்கத்தக்கது

### அமைச்சர் டக்ளஸ் பாராட்டு

நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக எதிர்காலத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள்திணைக்களத்தினதும் யாழ். மாநகர சபையினதும் இணைந்த செயற்பாட்டுக்கான முன்மொழிவு வரவேற்கத்தக்கது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக, இந்து ஆலயங்களின் அபிவிருத்தி மற்றும் பரிபாலனச் செயற்பாடுகளைச் செழுமைப்படுத்துவதற்கான வழிமுறைகள், நாவலர் கலாசார மண்டபத்தின் புனரைமைப்பு மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் யாழ். மாநகர சபை இணைந்து கூட்டு முயற்சியில் நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான பணிகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்களுக் கான அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர்; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சருடன் சந்திப்பு ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த வேளையிலே நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டவேளை மேற்படி விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இந்த விடயம் தொடர்பாகக் கூறுகையில் –

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு முழு உரிமையுடைய நாவலர் கலாசார மண்டபத்தைத் தற்போது யாழ். மாநகர சபை நிர்வாகமே பராமரித்து வருகின்ற நிலையில், சில முரண்பாடுகள் நிலவியபோதும் அதனை இரு நிர்வாகமும் இணைந்து பராமரிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தைப் பெரிதும் வரவேற்கிறேன். – என்றார்.

எதிர்வரும் ஆண்டு நாவலரின் இருநூறாவது பிறந்த ஆண்டு. இந்த ஆண்டிலே புதுப்பொலிவோடு கூடியதாகச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் அதற்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பைச் சிறந்த முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தையான நாவலர் பெருமானுக்கு இப்படி ஒரு விழா எடுப்பதற்கும் வரப்போகின்ற ஆண்டை நாவலர் ஆண்டாகப் பிரகடனம் செய்வதற்கும் தயாராகவுள்ள நாட்டின் பிரதமருக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் இந்தக் கட்டத்தில் நிலையறிந்து கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான தீர்மானத்துக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கும் யாழ். மாநகர சபைக்கும் எனது பாராட்டுகள் என்று தெரிவித்தார்.

## ஏனைய திரிவுகளை விடவும் ஒமிக்ரோன் வீரியம் கூடியது!

### வைத்திய நிபுணர் எச்சரிக்கை

ஒமிக்ரோன் திரிவு ஏனைய திரிபுகளை விடவும் வீரியம் கூடியதாக இருக்குமாயின், இலங்கையின் தற்போதைய நிலைவரம் எதிர்வருங்காலத்தில் மிக மோசமடையக்கூடும் என சுகாதாரக்கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் வைத்தியநிபுணர் ரவீந்திர ரன்னன் எலிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் ஒமிக்ரோன் திரிவு நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் அவசியம் தொடர்பாகத் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவேற்றியுள்ளார்.

மேலும், இந்த வைரஸ் திரிவுகள் எந்தளவிற்கு வலுவானவை என்பதை அறிந்து கொள்ள முடியாதமையின் காரணமாக நாம் அவற்றுடனான போராட்டத்திலேயே இருக்கின்றோம் என ரவீந்திர ரன்னன் எலிய கூறியுள்ளார்.

அந்தவகையில் துரதிஷ்டவசமாக முன்னர் வெளியான தரவுகளின்படி ஒமிக்ரோன் திரிபு அனைத்தையும்விட வலுவானதாக இருக்கும் பட்சத்தில், தற்போதைய நிலைவரம் மிகமோசமடையும். எனவே, அதனைக் கையாள்வதற்கு நாம் தயாராகவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோர் தொடர்பாக, உடனடியாகப் பயணக்கட்டுப்பாடுகளை விதிப்பது அவசியமாகும் என ரவீந்திர ரன்னன் எலிய குறிப்பிட்டுள்ளார்.

## மலசலகூடத்திலிருந்து சிசு சடலமாக மீட்பு!

பூண்டுலோயா – நியங்கந்தர பிரதேசத்தில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் மலசலகூடத்திலிருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, ஆடைத்தொழிற்சாலையின் பின்புறத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் 23 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், கைதான பெண் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# 2030ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தில் சேரும் பெண்களின் எண்ணிக்கையை 30 சதவீதமாக அதிகரிக்க பிரித்தானியா திட்டம்!



2030ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தில் சேரும் பெண்களின் வீதத்தை 30 சதவீதமாக அதிகரிக்க, பிரித்தானியா திட்டமிட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெண் சேவைப் பணியாளர்கள் அனுபவிக்கும் பாலியல் துன்புறுத்தல், தாக்குதல் மற்றும் கொடுமைப்படுத்துதல் ஆகியவற்றின் அளவை அம்பலப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மோசமான அறிக்கையின் பிரதிபலிப்பாக புதிய இலக்கு வெளிப்பட்டது.

அறிக்கையை வழிநடத்திய நாடாளுமன்ற உறுப்பினர், பாதுகாப்புப் பணியில் பெண்களின் அனுபவங்களை மேம்படுத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சகம். முன்னுரிமை அளித்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. மேலும் அவரும் அவரது சகாக்களும் செய்த 50 பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொண்டதற்காக அமைச்சர்களைப் பாராட்டினார்.

ஆனால், இராணுவ பலாத்கார வழக்குகளை சிவில் நீதிமன்றங்களில் விசாரிக்க அமைச்சகம் அனுமதி மறுத்ததால் தான் ஏமாற்றம் அடைந்ததாக ஆயுதப்படை துணைக் குழுவின் பெண்களின் தலைவி சாரா அதர்டன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 'தற்போதைய அமைப்பு நீதியை வழங்கத் தவறி வருகிறது என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் இருந்தபோதிலும், இராணுவ நீதிமன்ற அதிகார வரம்பிலிருந்து பாலியல் வழக்குகளை நீக்க பாதுகாப்பு அமைச்சகம் மறுத்திருப்பது ஏமாற்றமளிக்கிறது.

இராணுவம் என்பது ஆண்களின் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனம் என்பது தெளிவாகிறது. எனவே, பெண்களின் ஆட்சேர்ப்பு வீதத்தை இரட்டிப்பாக்குவது போன்ற இலட்சிய இலக்குகளை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. மேலும் பெண்களின் உடல்நலம், சீருடை மற்றும் உபகரணங்கள் ஆகிய பணிகளை விரைவுபடுத்தியுள்ளது' எனக் கூறினார்.

அதேநேரத்தில், நாடாளுமன்றத்தின் பாதுகாப்புத் தெரிவுக்குழுவிற்குள் துணைக் குழுவாக அமர்ந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்த பரிந்துரைகளில் 33 பரிந்துரைகளைப் பாதுகாப்பு அமைச்சகம் ஏற்றுக்கொண்டது.

கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு போன்ற முறைப்பாடுகளைக் கையாள்வதில் அதிக சுதந்திரத்தை பாதுகாப்பு அமைச்சகம் உறுதியளித்தது. ஒரு புதிய 'வெளி தொடர்பு விசாரணை சேவை' மற்றும் ஒரு வழக்கு தகுதி உள்ளதா என்பது குறித்த முடிவுகளைக் கையாள ஒரு மத்திய குழுவை உருவாக்கியது.

## உக்ரைனை ஆக்கிரமிக்க ரஷ்யா திட்டம் தங்களிடம் ஆதாரம் உண்டென்கிறது அமெ.



உக்ரைனை ஆக்கிரமிக்க ரஷ்யா திட்டமிட்டு வருவது தொடர்பாக தங்களிடம் ஆதாரம் உள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து லாட்வியா தலைநகர் ரிகாவில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற நேட்டோ உறுப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன், 'உக்ரைனின் நிலைத்தன்மையை சீர்குலைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. மேலும் உக்ரைனுக்கு எதிராக மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவும் ரஷ்யா ஆயத்தமாகி வருவதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது. ரஷ்யா அத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டால், அந்த நாட்டின் மீது இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்' எனக் கூறினார்.

உக்ரைனின் அங்கமாக இருந்த கிரிமீயாவுக்கு கடந்த 2014ஆம் ஆண்டு படைகளை அனுப்பிய ரஷ்யா, அந்தத் தீபகற்பத்தைத் தன்னுடன் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டது.

இதேபோல குளிர்காலத்தின்போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து, கிரிமீயாவைப் போல அந்த நாட்டையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளதாக அச்சம் நிலவுகின்றது.



## ஹோண்டுராஸில் முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ தேர்வு!

லத்தீன் அமெரிக்க நாடான ஹோண்டுராஸில், முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) வெளியான ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளின் படி, சியோமாரா காஸ்ட்ரோ 53 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான டெகுசிகல்பா மேயர் நஸ்ரி அஸ்ஃபுரா, 34 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

அத்துடன், வெற்றிபெற்ற சியோமாரா காஸ்ட்ரோவுக்கு நஸ்ரி அஸ்ஃபுரா, வாழ்த்து தெரிவித்தார்.

இதன் மூலம் 12 ஆண்டுகளுக்கு பின்னர் ஹோண்டுராஸில் இடது சாரி கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. மேலும் இந்த வெற்றியின் மூலம் ஹோண்டுராஸின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் சியோமாரா காஸ்ட்ரோ பெற்றுள்ளார்.

62 வயதான சியோமாரா காஸ்ட்ரோ, முன்னாள் ஜனாதிபதி மானுவல் ஜெலயாவின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

## 2022–2023ஆம் ஆண்டுகளில் 114 மில்லியன் கொவிட் தடுப்பூசி அளவை வாங்கும் பிரித்தானியா!




2022ஆம் மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் 114 மில்லியன் கொவிட் தடுப்பூசி அளவை வாங்குவதற்கான ஒப்பந்தங்களில், பிரித்தானிய அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

மொடர்னா தடுப்பூசியின் 60 மில்லியன் கூடுதல் அளவுகள் மற்றும் மேலும் 54 மில்லியன் ஃபைசர்- பயோஎன்டெக் அளவுகளை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என சுகாதார செயலாளர் சாஜித் ஜாவிட் தெரிவித்தார்.

தடுப்பூசிகள் இன்னும் எங்கள் சிறந்த தற்காப்பு அளவுகளையும் நீண்ட காலத்துக்கு நமக்குத் தேவையான போதுமான அளவுகள் நாட்டில் இருப்பதை கூடுதல் அளவுகள் உறுதி செய்யும் எனவும் அவர் மேலும் கூறினார்.

பிரித்தானியாவில் புதிய ஒமிக்ரோன் மாறுபாட்டின் அடையாளம் காணப்பட்ட தொற்றுகள் நேற்று (புதன்கிழமை) 32ஆக அதிகரித்ததன் மத்தியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் மேலும், ஒன்பது தொற்றுகள் மற்றும் ஸ்கொட்லாந்தில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு நிறுவனம் உறுதிப்படுத்தியது.

இந்த மாறுபாடு இப்போது கிழக்கு மிட்லாண்ட்ஸ், இங்கிலாந்தின் கிழக்கு, லண்டன், தென்கிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார பாதுகாப்பு நிறுவனம் மேலும் கூறியது.

அடையாளம் காணப்பட்ட ஸ்கொட்லாந்து தொற்றுகள், லனார்க்ஷயர் மற்றும் கிரேட்டர் கிளாஸ்கோவில் உள்ளன.

ஒமிக்ரோன் கண்டறிதலுக்கு மத்தியில், அரசாங்கம் சமீபத்தில் பிரித்தானியா திரும்பும் பயணிகளுக்கான பி.சி.ஆர். சோதனைகள் தொடர்பான விதிகளை கடுமையாக்கியது மற்றும் அதிக ஆபத்துள்ள நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு தனிமைப்படுத்தப்பட்ட விதிகளை அறிமுகப்படுத்தியது. அத்துடன் இங்கிலாந்தில் கடைகள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் முகக்கவசகளை மீண்டும் கொண்டு வந்தது.

# உடற்கூறாய்வுக்குபின் ஆடைகளின்றி கட்டி அனுப்பி அவமதிக்கப்பட்ட மீனவர் ராஜ்கிரண் நிலை பெருங்கோபத்தைத் தருவதாக சீமான் அறிக்கை

இலங்கைக்கடற்படையினரால் கொலைசெய்யப்பட்ட தமிழக மீனவர் ராஜ்கிரனது உடலை உடற்கூறாய்வு செய்தபின், வெறுமனே பொட்டலம் கட்டி, ஆடைகளின்றி அனுப்பி இலங்கை அரசு அவமதித்திருப்பது ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது என நாம்தமிழர்கட்சியின்தலைமைஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக மீனவரின் இறந்த உடல் மீதும் இனவெறியைக் காட்டும் சிங்கள அரச பயங்கரவாதத்தின் இந்தக் கோரச்செயல் வன்மையான கண்டனத்திற் குரியது. இலங்கையின் யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரியில் நடைபெற்ற மீனவரது உடற்கூறாய்வுக்குப் பின்னர், சர்வதேச விதிகளையோ நடைமுறைகளையோ துளியும் பின்பற்றாது, ஆடைகளற்ற வெற்றுடலாகவே மீனவரது உடலை அனுப்பிய செய்தி தமிழகத்தில் நடைபெற்ற உடற்கூறாய்வின்போது தெரியவந்திருப்பது அடக்கவியலாப் பெருங்கோபத்தையும் உள்ளக் கொதிப்பையும் தருகிறது.



இது தமிழர்கள் மீதான தீரான வன்மத்தையும் கொடும் இனவெறியையுமே காட்டுகிறது. இது தொடர்பாக, இலங்கை அரசின் இந்தியத்தூதரகத்தையும் இந்திய வெளியுறவுத்துறையையும் கேள்விக்குள்ளாகி, அவற்றைச் சார்ந்தவர்களை நேரில் விளக்கமளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டும்கூட ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசும் தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசும் இதுவரை வாய்திறக்காது அமைதி காப்பது வெட்கக்கேடானது. குஜராத் அருகே பாகிஸ்தான் நாட்டுக்கடற் படையினரால் கொலைசெய்யப்பட்ட மராத்திய மீனவருக்காக பா.ஜ.க. அரசு கண்டனம் தெரிவிக்கிறது. அந்த நாட்டுக் கடற்படை மீது குஜராத் அரசு வழக்குத் தொடுக்கிறது. அதேபோல, கேரளத்தில் இரு மீனவர்கள் கொலைசெய்யப்பட்ட விவகாரத்தை சர்வதேசநீதிமன்றம்வரை கொண்டுசெல்ல வழிவகை செய்தது அம்மாநில அரசு. ஆனால், தமிழகத்தில் இதுவரை 850இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் பச்சைப்படுகொலை செய்யப்பட்டும் மத்திய, மாநில அரசுகள் அதற்குப் பெரியளவில் எவ்வித எதிர்வினையுமாற்றாது அலட்சியப்படுத்துவதும், தமிழ் மீனவர்களின் உயிரைத் துச்சமெனக் கருதிக் கடந்துசெல்வதுமான வரலாற்றுத் துரோகத்தினை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். ஆகவே, மீனவர்ராஜ்கிரண்படுகொலைக்கான நீதியை இனியும் பெற்றுத்தராது ஒன்றிய அரசும், மாநில அரசும் காலங்கடத்தினால், அதற்கான எதிர்வினைகளைக் கட்டாயமாக மக்கள் மன்றத்திலே இரு அரசுகளும் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கிறேன் எனத் தெரிவித்திருக்கிறார்.



## ஐக்கிய முற்போக்கு கூட்டணி இப்போது இல்லை மேற்கு வங்க முதல்வர் மம்தா பானார்ஜி கருத்து

மாநிலக் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால் பாரதிய ஜனதாக் கட்சியை எளிதில் வீழ்த்தலாம் என சரத் பவார் மற்றும் சிவசேனா கட்சித் தலைவர்களைச் சந்தித்தபின் மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி 3 நாள் பயணமாக மும்பை சென்றுள்ள நிலையில் அங்கு சிவசேனா கட்சியின் தலைவர்கள் ஆதித்ய தாக்கரேவையும் சஞ்சய் ராவத்தையும் சந்தித்துப் பேசினார். இதையடுத்து தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரையும் மம்தா சந்தித்தார். அதன் பின் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய மம்தா, தற்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி என்ற ஒன்று இல்லை எனத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆலோசனை கூறுவதற்காக பொது சமூகத்தில் உள்ள சிலரைக் கொண்டு குழு ஒன்றை அமைக்க காங்கிரஸிடம் தான் யோசனை கூறினார் எனவும், ஆனால் அது ஈடேறவில்லை என்றும் தெரிவித்தார். தேசிய அளவில் பாஜகவுக்கு எதிரான அணிக்கு தலைமை தாங்குவீர்களா என கேட்டதற்கு, தான் ஒரு சாதாரண தொண்டர் என்றும் அப்பணியிலேயே தொடர விரும்புகிறேன் எனவும் மம்தா குறிப்பிட்டார். அரசியலில் உள்ளவர்கள் தொடர்ச்சியாக அப்பணியைக் கவனிக்க வேண்டும் என்றும் பெரும்பாலான நாள்கள் வெளிநாடுகளில் இருக்கின்றமை சரியல்ல, என்றும் மம்தா தெரிவித்தார்.

மம்தாவின் இப்பேச்சு ராகுல் காந்தி மீதான மறைமுக விமர்சனமாகப் பார்க்கப்படுகிறது. தேசிய அளவில் காங்கிரஸிற்கு மாற்றாக திரிணமூல் உருவெடுக்க முனைவதாகத் தகவல்கள் வெளியாகும் நிலையில், மம்தாவின் மும்பைச் சந்திப்புகள் முக்கியத்துவம் மிக்கனவாகப் பார்க்கப்படுகின்றன. பின்னர், சரத்பவாருடன் செய்தியாளர்களைச் சந்தித்த மம்தா பானர்ஜியிடம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. ஐக்கிய முற்போக்கு கூட்டணியா?; அதெல்லாம் இப்போது இல்லை என்று அவர் பதில் கூறினார்.

காங்கிரஸ் இல்லாமல் பா.ஜ.க.வைத் தோற்கடிக்கமுடியும் என நினைப்பது வெறும் கனவு. இந்திய அரசியலின் யதார்த்தம் அனைவருக்கும் தெரியும், என்று மம்தாவின் கருத்துக் குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் வேணுகோபால் விமர்சித்துள்ளார்.

## கல்வி நிறுவனங்களில் சாதிப்பாகுபாடு கவலை தருகிறது மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வேதனை



கல்வி நிறுவனங்களில் சாதி பாகுபாடு காண்பிக்கப்படுவது கவலைக்குரியது என்று மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வேதனை தெரிவித்திருக்கிறார்

தென்சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விதி எண் 377 இன் கீழ் வலியுறுத்திய கோரிக்கையில், ஒடுக்கப்பட்ட சாதிப்பின்னணியில் உள்ள மக்களுக்கு எதிரான சாதி அடிப்படையிலான பாகுபாடு மிகவும் கவலைக்குரியது. நமது கல்வி நிறுவனங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இந்திய மத்திய கல்வி அமைச்சகம், மின் பயன்பாட்டு முறையின் கீழ் எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஒ.பி.சி. போன்ற சமூகங்களில் இருந்து ஆசிரியப் பணியிடங்களை செப்டெம்பர் 2022 இற்குள் நிரப்ப இந்திய மேலாண்மை நிறுவனங்கள் ஐ.ஐ.எம், ஐ.ஐ.டி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களைக் கேட்டுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து சில ஐ.ஐ.டி.கள் சிறப்பு ஆட்சேர்ப்பு இயக்கத்துக்கான அறிவிப்புகளை வெளியிட்டன. ஆனால், அதற்கான செயற்பாடுகள் சுறுசுறுப்பாக நடைபெறவில்லை. மேற்கூறிய நிறுவனங்களில் விரைவான ஆட்சேர்ப்பு இயக்கத்தை உறுதிசெய்ய இந்திய மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல அதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக மாதாந்த அறிக்கைகள் பொது அளவில் கிடைக்கச் செய்யவேண்டும். இடஒதுக்கீடு தொடர்பான அரசமைப்பு கோட்பாடுகளின்படி ஆட்சேர்ப்பு இயக்கம் நடைபெறுவதை உறுதிசெய்ய சிறப்பு உயர்நிலைக்குழுவும் அமைக்கப்பட வேண்டும், என வலியுறுத்தியிருக்கிறார்.

## கிரிப்டோ கரன்சி மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தகவல்



கிரிப்டோகரன்சி தொடர்பான மசோதா, அமைச்சரவை ஒப்புதல் பெற்று நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படும் என இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். கிரிப்டோ கரன்சி குறித்த மசோதா வெளியாகும் வரை அது தொடர்பான விளம்பரங்களுக்குத் தடை விதிக்கப்படுமா, என மாநிலங்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதில் அளித்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், கிரிப்டோ கரன்சி தொடர்பான விளம்பரங்களுக்குத் தற்போது தடைவிதிக்கப்படாது என்றார். ரிசர்வ் வங்கி மூலமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும், விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று கிரிப்டோ கரன்சி மசோதா தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் கூறினார். கிரிப்டோ கரன்சிகளை அனுமதிக்கக் கூடாது என ரிசர்வ் வங்கி ஏற்கனவே பரிந்துரை செய்திருப்பதால், அதனைத் தடைசெய்யும் வகையில் மசோதா கொண்டு வரப்படும் எனசெய்திகள்தெரிவிக்கின்றன.

## ஒமிக்ரோன் வைரஸ் அச்சுறுத்தலால் இந்தியாவில் சர்வதேச விமானப் போக்குவரத்து சேவை ஒத்திவைப்பு

ஒமிக்ரோன் வைரஸ் திரிபு பரவல் காரணமாக இந்தியாவில் டிசெம்பர் 15 முதல் மீள ஆரம்பிக்கப்படவிருந்த சர்வதேச விமான போக்குவரத்து சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 15 முதல் மீளத்தொடங்குவதாக அறிவிக்கப்பட்ட சர்வதேச விமானங்கள் சேவை குறித்த திகதியில் ஆரம்பிக்கப்படாது என்று இந்திய மத்திய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில், சர்வதேசப் பயணிகள் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சரியான திகதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும், என்று கூறப்பட்டுள்ளது.

உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாடு பாதிப்பு இதுவரை 20 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாழைச்சேனை பிரதேச செயலக விடயத்தில் மட்டு. மாவட்ட செயலகம் முட்டுக்கட்டை!

## சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் குற்றச்சாட்டு



வாழைச்சேனை மக்களுக்குத் தேவையான பிரதேச செயலக வர்த்தமானி அறிவிப்பு இன்னும் வெளிவரவில்லை. இதனால் நில அளவை படம் பெறுவதில் கூட நிறைய சிக்கல்கள் இருக்கின்றன.

இது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு கடிதத் தொடர்புகளை ஏற்படுத்தி இந்த பிரதேச செயலக எல்லைகள் தொடர்பிலான இறுதி முடிவுக்கு வர வர்த்தமானி அறிவிப்பை வெளியிடத் தயாரான போது மட்டக்களப்பு மாவட்டச் செயலக நிர்வாகம் தடையாக உள்ளது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நாடாளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாபிழ் இஸட்.ஏ. நஸீர் அஹமட்டின் பிரேரணையை ஆமோதித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட 1999.06.03 அன்று அமைச்சரவையினால் பன்னம்பல ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று தெற்கு ஆகிய பிரதேச செயலகங்களை உருவாக்க சிபாரிசு செய்திருந்தது. அந்த அடிப்படையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலத்துக்கு 11 கிராம சேவகர் பிரிவுகளும் கோறளைப்பற்று தெற்கு 18 கிராம சேவகர் பிரிவுகளும் 686 சதுர கிலோமீற்றர் நிலமும் வழங்கப்பட்டிருந்தது. கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலத்துக்கு 240 சதுர கிலோமீற்றர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி இறுதி அமைச்சரவை அங்கீகாரம் 2000.07.13ஆம் திகதி வழங்கப்பட்டு இந்த புதிய பிரதேச செயலகங்கள் 2002.05.26 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தக்காலகட்டத்தில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலத்துக்கு 11 கிராம சேவகர் பிரிவுகளும் உள்வாங்கப்பட்டு நிர்வாகம் இயங்கி வந்தது. 211B, 211H கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஏறத்தாழ 185 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை கொண்டதாக வாழைச்சேனை பிரதேச செயலம் (கோறளைப்பற்று மத்தி) இயங்கிக் கொண்டிருந்தது. அங்கிருந்த மக்கள் வாக்காளர்களாக பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு நிர்வாகம் சீராக இயங்கியது.

இருந்தும் 2004 இற்குப் பின்னர் மட்டக்களப்பில் இருந்த மாவட்ட நிர்வாகம் 211B, 211H கிராம சேவகர் பிரிவுகளை கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைத்து அந்த நிலப்பரப்பை 185சதுர கிலோமீற்றரிலிருந்து 7.5 சதுர கிலோமீற்றராக குறைத்தது. இது வெளிப்படையான இனவாத செயற்பாடாக நோக்கப்படுகிறது.

அன்று அதிகாரத்திலிருந்து முன்னாள் நாடாளுமன்ற பிரதிநிதி எம்.எஸ்.எஸ்.அமீரலி மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவராக இருந்தும் முஸ்லிங்களுக்கு எதிராக இடம்பெற்ற நில அபகரிப்பின் போது பார்வையாளராக மட்டுமே இருந்துள்ளார். தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அல்ஹாபிழ் இஸட்.ஏ. நஸீர் அஹமட் குறிப்பிட்டன போன்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு 1.5 சதவீத காணிகள் மட்டும் தான் உள்ளன. அங்கு வறுமைக்கோட்டுக்கு கீழே நிறைய மக்கள் வாழ்கின்றனர்.

இந்த சபையில் முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி. சந்திரகாந்தன், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என பல்வேறு தரப்பினரும் உள்ளார்கள். நலிவடைந்துள்ள கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் வாழைச்சேனை மக்களுக்காக நியாயமான தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## கல்முனை மாநகர சபையின்

# வருமான அறவீடுகள் டிஜிற்றல் மயமாகின்றன



ஐரோப்பியயூனியன்அனுசரணையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தால் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்றிறனை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையின் வருமான அறவீடுகளை டிஜிற்றல் மயப்படுத்தும் முறைமை நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமிர் ஷாலிஹ் ஒருங்கிணைப்பில் முதல்வர் செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.மணிவண்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் .

இதன்போதுகுறித்தஇலத்திரனியல் செயலியின் நோக்கம், பயன்பாடுகள் மற்றும் அனுகூலங்கள் தொடர்பாக அதன் வடிவமைப்பாளர் காமிஸ் கலீஸ் விளக்கமளித்தார்.

அத்துடன் வெளிநாட்டில் இருந்து விசேடமாகக்கொள்வனவுசெய்யப்பட்ட இலத்திரனியல் கருவிகள் மாநகர சபையின் வருமான அறவீட்டாளர்களுக்கு இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இதன் மூலம் கல்முனை மாநகர சபையின் அனைத்து வருமான அறவீடுகளும் இலத்திரனியல் முறைமையின்ஊடாகமுன்னெடுக்கப் படவுள்ளன. இதனால் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்கள் தம்மிடம் வருகின்ற மாநகர சபை வருமான அறவீட்டாளர்களிடம் செலுத்துகின்ற எந்தவொரு வரி மற்றும் கட்டணத்துக்கான பற்றுச்சீட்டை அதே இடத்தில் இலத்திரனியல் கருவி மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அத்தொகை உடனடியாக ஒன்லைன் ஊடாக மாநகர சபையின் அலுவலக கணிணிப் பதிவில் வரவு வைத்துக் கழிக்கப்படும். குறித்த இலத்திரனியல் பற்றுச்சீட்டில் செலுத்திய தொகை மற்றும் நிலுவைத் தொகை உள்ளிட்ட விவரங்கள் அடங்கியிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மூன்றாவது கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கந்தளாயில் முன்னெடுப்பு

*திருகோணமலை - கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூன்றாவது கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.*

*60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது பைசர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.*

*அத்தோடு தடுப்பூசி செலுத்தாதவர்கள் மற்றும் ஒரு முறை தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் இரண்டாவது தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டன.*

*அதிகமான அறுபது வயதைத் தாண்டிய முதியவர்கள் ஆர்வத்தோடு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*







# மட்டக்களப்பு பிரபல உணவு நிலையம் சுகாதார அதிகாரிகளால் சுற்றிவளைப்பு



உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி உணவு தயாரிப்பில் ஈடுபட்டு விற்பனை செய்த குற்றத்தின் கீழ் மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல சர்வதேச உணவு விற்பனை நிறுவனத்தின்மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை மீட்டுள்ளனர் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகப் புகழ் பெற்ற நிறுவனத்தின் மட்டக்களப்பு கிளையை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் ஆகியோர் நேற்று சுற்றி வளைத்தனர்.கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் மற்றும் பொது சுகாதார பரிசோகர்கள், தாதிய மாணவர்கள், சுகாதாரத்துறை சார்ந்தோரும் பங்கு கொண்டனர்.

இதன்போது சுற்றுத்துண்டு இடாமல் பொதி செய்யப்பட்டு உணவு தயாரிப்பிற்கு பயன்படுத்திய உணவுப்பொருள்கள் மீட்கப்பட்டன.

குறித்த நிறுவனத்தின்மீது மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் சுகாதார அதிகாரிகள் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளனர் என புளியந்தீவு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.தீபகுமாரன் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா – நியூசிலாந்து 2ஆவது டெஸ்ட் நாளை மும்பையில் ஆரம்பமாகவுள்ளது



இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. இரு அணிகளும் விளையாடும் இரண்டாவது டெஸ்ட் மும்பை வன்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல் டெஸ்டில் இந்திய அணி இறுதிநேரத்தில் தனது வெற்றி வாய்ப்பை இழந்தது. நியூசிலாந்தின் கடைசி விக்கெட் ஜோடியின் சிறப்பான ஆட்டத்தால் இந்தியாவுக்கான வெற்றி பறிபோனது. இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றும் ஆர்வத்தில் இந்திய அணி உள்ளதால், அணியில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரி-20 தொடருக்கும் முதல் டெஸ்டுக்கும் ஓய்வு கொடுக்கப்பட்ட இந்தியக் கப்டன் விராட் கோலி நாளைய டெஸ்டில் அணியில் விளையாடவிருக்கிறார். விராட் கோலி அணிக்குள் வரவதால் அணியிலிருந்து யார் நீக்கப்படுவார் என்ற கேள்விக்கு இதுவரை பதில் வழங்கப்படவில்லை. கடந்த டெஸ்டில் அறிமுகமான ஸ்ரேயாஸ் அய்யர் முதல் இன்னிங்சில் சதமும் இரண்டாவதில் அரைச்சதமும் அடித்து தனது நிலையைப் பலப்படுத்திக்கொண்டுள்ளதால் அவர் விலக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவேயுள்ளன.

முதலாவது டெஸ்டில் கப்டனாக பணியாற்றிய ரகானே நீக்கப்பட அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். கடந்த 16 டெஸ்ட் போட்டிகளில் அவரது சராசரி 24.39 ஆகவேயுள்ளது. அதேபோல ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வால், புஜாரா ஆகியோரது துடுப்பாட்டமும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளதால் இந்த மூவரில் இருவர் நீக்கப்படலாமென எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இரு அணிகளும் இதுவரை 61 டெஸ்ட் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இந்தியா 21இலும், நியூசிலாந்து 13இலும் வெற்றி பெற்றுள்ளன. 27 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றுள்ளன.

## பிரபல டென்னிஸ் வீராங்கனை ஜோகன்னா கோன்டா தொழில்முறைப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்



இங்கிலாந்து நாட்டின் பிரபல டென்னிஸ் வீராங்கனை ஜோகன்னா கோன்டா, தொழில்முறை டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார். காயங்களாலும் சத்திரசிகிச்சையாலும் போட்டிகளில் பங்கேற்பதில் சிரமப்பட்டு வந்ததால் உலகத் தரவரிசையில் நான்காவது இடத்தில் இருந்து 113 ஆவது இடத்துக்கு அவர் தள்ளப்பட்டார்.

பிரித்தானியாவின் முக்கிய டென்னிஸ் வீராங்கனையான கோன்டா, நான்கு முக்கிய கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் தலா ஒவ்வொருமுறை அரையிறுதி வரை முன்னேறியுள்ளார். டபுள்யூ.டி.ஏ. தொடர்களில் அவர் நான்கு முறை சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## தடைக்காலம் முடிந்து கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ள இலங்கை அணி வீரர்கள்

இங்கிலாந்தில் வைத்து கொவிட்-19 வைரஸ் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் தனுஷ்க குணதிலக்க, நிரோன் டிக்வெல்ல மற்றும் குசல் மெண்டிஸ் மூவரும் லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) போட்டிகள் மூலம் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் கள மிறங்கவுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணி இந்த ஆண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், குறித்த சுற்றுப்பயணத்தின்போது வெளியாகிய காணொளி ஒன்றின் அடிப்படையில் இவர்கள் மூவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி இந்த மூன்று வீரர்களையும் விசாரித்த குழு வழங்கியிருந்த இறுதி அறிக்கைக்கு அமைய தனுஷ்க குணத்திலகவிற்கு இரண்டு வருட போட்டித்தடையும், நிரோன் டிக்வெல்ல, குசல் மெண்டிஸ் ஆகியோருக்கு தலா ஒன்றரை வருட போட்டித் தடையும், மூவருக்கும் தலா 25,000 அமெரிக்க டொலர்கள் வரையிலான அபராதமும் விதிக்கப்படப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

எனினும் கடந்த ஜூன் தொடக்கம் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்ட இந்த வீரர்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் நிர்வாகம், ஆறு மாத காலம் உள்ளூர் போட்டிகளில் விளையாடுவதற்கான தடையையும், ஒரு வருடத்துக்கான சர்வதேச போட்டித்தடையையும் வழங்கியதோடு, இரண்டு வருடங்களுக்கான ஒத்திவைக்கப்பட்ட போட்டித்தடையுடன் 10 மில்லியன் ரூபாவை அபராதமாகச் செலுத்த வேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்திருந்தது.

இது தவிர, இந்த வீரர்கள் மூவரும் இலங்கைக் கிரிக்கெட் சபை பரிந்துரைக்கும் வைத்தியர் ஒருவரிடம் கட்டாயமான உளநல ஆலோசனைகளைப் பெறவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் இந்த வீரர்களுக்கான உளநல வைத்தியர் வழங்கிய பரிந்துரைக்கு அமைய இந்த வீரர்களுக்கான உள்ளூர் போட்டித்தடை கடந்த நவம்பர் மாதம் நீக்கப்பட்டிருந்தது. எனினும் தடை நீக்கப்பட்ட பின்னரும் இந்த மூன்று வீரர்களும் தற்போது நிறைவடைந்த உள்நாட்டு கழக கிரிக்கெட் தொடரில் பங்கேற்றிருக்கவில்லை.

ஆனால், இந்த வீரர்கள் மூவரும் இம்மாதம் 05ஆம் திகதி ஆரம்பமாகும் லங்கா பிரீமியர் லீக் தொடரின் இரண்டாவது பருவகாலத்துக்கான போட்டிகள் மூலம் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் தனுஷ்க குணதிலக்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் கோல் கிளேடியட்டர்ஸ் அணிக்காகவும், நிரோன் டிக்வெல்ல தம்புள்ளை ஜயன்ட்ஸ் அணிக்காகவும் ஆடவிருக்கின்றனர் என்று தெரிகிறது.





## ஐக்கிய அரபு இராச்சிய ரி-20 கிரிக்கெட் லீக்கில் கால்பதிக்கும் மன்செஸ்டர் யுனைட்டெட்

இங்கிலாந்தின் பிரபல கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தை நிர்வகிக்கும் லான்சர் கப்பிட்டல் நிறுவனத்தின் இணைத் தலைவரான அவரம் கிளாசர் விரைவில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள ரி-20 கிரிக்கெட் கழக அணி ஒன்றை வாங்கவிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மன்செஸ்டர் யுனைடட் நிர்வாகம் ஐ.பி.எல். அணியொன்றை வாங்குவதற்கு விண்ணப்பித்திருந்தாலும் அது சாத்தியமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மும்பை இன்டியன்ஸ் அணியின் உரிமையாளர்களான ரிலையன்ஸ் குழுமம். ஐக்கிய அரபு இராச்சிய ரி-20 கழகமொன்றை வாங்கவிருப்பதாக அறிவித்து ஒரு வாரத்தின் பின்னராக மன்செஸ்டர் நிர்வாகத்தின் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது.




# இலங்கைக்கு உள்ளும் நுழைந்தது ஒமிக்ரோன்?

ஒமிக்ரோன் பிறழ்வு இந்நாட்டுக்கு வந்துள்ளதாக உறுதியாகக் கூற முடியாது என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது நமது நாட்டுக்கு குறித்த வைரஸ் தாமதமாக வரக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இது தொடர்பில் உறுதியாகக் கூற முடியாது. உறுதியான தகவல்கள் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

எனினும், உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ள விதத்தைப் பார்க்கும் போது நமது நாட்டுக்கு குறித்த பிறழ்வு வரவில்லை என எவராலும் கூற முடியாது.

எனினும், இலங்கைக்கு தென்னாபிரிக்காவில் இருந்து நேரடியாக அதிகளவான மக்கள் வருவதில்லை. அதன் காரணமாக மற்றைய நாடுகளை விட நமது நாட்டுக்கு வருவது தாமதமாகக்கூடும்.

நாங்கள் ஒரு மாதிரியை எடுத்து மட்டுமே பகுப்பாய்வு செய்கிறோம். அந்த மாதிரிக்கு அகப்படும் வரையில் குறித்த வைரஸ் பிறழ்வு நாட்டில் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# எந்த நேரத்திலும் முழு நாடும் இருளில் மூழ்கும் அபாய நிலை!

மின்சார மீள் இணைப்பு பணிகளில் ஈடுபடப் போவதில்லை என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று(புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளமையால், 8 மணிநேரத்துக்கு மேலதிகமாகப் பணிபுரியப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களுக்கான கடமை நேரம் 8 மணிநேரத்துக்குள் உள்ளடங்காத காரணத்தால் இவ்வாறு மின்சார மீள் இணைப்புப் பணிகளில் ஈடுபடப்போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இழுவை மடி மீன்பிடி முறைமையை நிறுத்தக்கோரி கையெழுத்து வேட்டை

இழுவைமடி மீன்பிடி முறையை முழுமையாக நிறுத்தக்கோரி நேற்று கையெழுத்து பெறும் வேலைத்திட்டம் ஒன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. பூநகரி நாச்சிக்குடா சந்தியில் நேற்று (புதன்கிழமை) காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட குறித்த கையெழுத்திடும் போராட்டத்தில் பலரும் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். மேற்படி வேலைத் திட்டத்தை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெல் சந்தைப்படுத்தல் சபையின் புதிய தலைவராக நீல் டி அல்விஸ்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் புதிய தலைவராக நீல் டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) காலை நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமை அலுவலகத்தில் வைத்து, அவருக்கான நியமனக் கடிதத்தை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அவரிடம் கையளித்துள்ளார் என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# நத்தார் தின நினைவு முத்திரை பிரதமர் மஹிந்தவால் வெளியீடு








நத்தார் தின நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (புதன்கிழமை) அலரி மாளிகையில் வைத்து வெளி யிடப்பட்டது.

முதலில் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை வெகுசன ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெருமவிடம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து டளஸ் அழகப்பெருமவினால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

45 ரூபா மற்றும் 15 ரூபா பெறுமதியான முத்திரைகளே இவ்வாறு வெளியிடப்பட்டன.

சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவில் முத்திரை வடிவமைப்பு போட்டியில் வெற்றிபெற்ற கந்தானை புனித செபஸ்தியன் மகா வித்தியாலயத்தின் நிமேஷ் சமத் பெரேரா மாணவன் மற்றும் நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் ஷினாலி ருவண்யா பீரிஸ் மாணவி ஆகியோரின் சித்திரங்களைக் கொண்டு இம்முறை நத்தார் தின நினைவு முத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.


## நல்லூரிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது அடுப்பு வெளியில் பற்றி எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று முன்னால் இருந்த வர்த்தக நிலையத்தினரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற வர்த்தக நிலையத்தினர் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டன.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சம்மாந்துறையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி – 1 பகுதியில் குறித்த எரிவாயு அடுப்பு வெடிப்புக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

வழமை போன்று தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை இயக்கியபோது குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த எரிவாயு அடுப்பை இயக்கி விட்டு வெளியில் சென்ற வேளை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது எனப் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2021இல் வெளியிடப்பெற்றது.